பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 225

செவ்வாய்க்கிழமை
09 ஜூலை 2026

ஆனி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

# செம்மணிப் புதைகுழி: சந்திரிகாவை விசாரிக்குக!

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 9

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் தீர்க்கமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

»11



## ரயிலுடன் மோதுண்டு தாய், மகன் படுகாயம்

சாவகச்சேரியில் கோரம்

கொடிகாமம், ஜூலை 9

சாவகச்சேரியில் ரயிலுடன் மோதுண்டு தாயும் மகனும் படுகாயம் அடைந்துள்ளனர். சாவகச்சேரி அரசடிப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்

»11

## பாதசாரிக் கடவையில் பந்தாடிய வாகனங்கள்

ஒருவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

பாதசாரி கடவையில் வீதியைக் கடந்துசென்ற ஒருவரை அடுத்தடுத்து இரு வாகனங்கள் மோதியதில் அந்த நபர் உயிரிழந்தார்.

வவுனியா - புளியங்குளம் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாக

»11

மாதகலில்

## வெற்றுக்காணியில் கைக்குண்டு



யாழ்ப்பாணம், ஜூலை 9

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெற்றுக் காணியொன்றுக்குள் கைக்குண்டொன்று நேற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

»11

சிறைக் கலவரத்துக்காக

## பதவி விலகும் எண்ணமில்லை

அமைச்சர் ஹர்ஷன திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறையில் ஏற்பட்ட கலவரத்துக்காகப் பதவி விலகும் எண்ணமில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»11

மருதங்கேணியில்

## இராணுவ முகாமுக்காகவே காணியை அபகரிக்கச் சதி

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் இராணுவ முகாமுக்காகவே காணிகளைஅபகரிப்பதற்கு நடவடிக்கை இடம்பெறுகின்றது என்று வடமராட்சி கிழக்குப் பதில் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மருதங்கேணியில் இன்று

»11

சிறைக்கலவரம்

## பலி எண்ணிக்கை 28ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 28ஆக அதிகரித்துள்ளது.

»11

## ரணிலுக்கு எதிரான விசாரணை நிறைவு

கொழும்பு, ஜூலை 9

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பான விசாரணைகள் நிறைவுக்கு வந்துள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்குத் தெரி

»11



நல்லூர் உற்சவகாலத்தில்

## யாழுக்கான ரயில்சேவைகளை மட்டுப்படுத்தியது பெருந்தவறு

பெரமுனவின் யாழ். இணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் கண்டனம்



கொழும்பு, ஜூலை 9

கொழும்பு - காங்கேசன்துறை ரயில் சேவையை வாரத்தில் நான்கு நாள்களாகக் குறைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம்

»11

மருத்துவத் தவறால் கை அகற்றம்;

## விசாரணைகளைத் துரிதப்படுத்துக பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும், இதற்காக சட்டமா அதிபரை நேரில் சந்தித்து ஆலோசனைகளைப் பெறுமாறும் பொலிஸாருக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான்

»11

முச்சந்தி முராரி

"செம்மணி நரபலி நாயகி தான் இவ்வளவு காலத்துக்குப் பிறகு சிக்குவன் எண்டு கனவிலயும் நினைச்சிருக்கா கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4484 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 02 33 50 52 |
| விசே. எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1551 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 24 46 48 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0510 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 4 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2590 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 04 22 46 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6242 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 7 1 4 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2272 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 30 32 44 46 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0358 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 44 62 |

# நீர்கொழும்பு சிறைவன்முறையை வெலிக்கடையுடன் ஒப்பிட முடியாது!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 9**

**நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவத்தை வெலிக்கடைச் சிறைச்சாலைச் சம்பவத்துடன் ஒப்பிட முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அன்று என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும்? அவ்வாறு எந்தவொரு அதிகாரமும் பயன்படுத்தவில்லை. தற்போது 7 சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர். நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மேலும் சில அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

சிறைச்சாலைக்குள் எவ்வாறு இரண்டாவது தடவை மோதல் இடம்பெற்றது. அதற்கு தலைமை வழங்கியது யார் என்பது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0950 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 2 9 5 5 5 3 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3216 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 05 20 53 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 19 35 39 56 |
| வெற்றி வாரம் | 5377 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 1046 |
| வெற்றி இலக்கம் | 02 20 27 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 04 11 14 37 |
| சீட்டிழுப்பு வாரம் | 4928 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கம் | 06 08 20 63 |
| வெற்றி வாரம் | 2392 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 08.07.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 14 21 29 41 |
| வெற்றி வாரம் | 3042 |

கண் பார்வை பறிபோன விவகாரம்:

# மேலும் 4 நோயாளர்களுக்கு தலா 10 இலட்சம் வழங்கல்!

கொழும்பு,ஜூலை 9

இலங்கையில் 'பெட்ரிசிலோன் அசிடேட்' என்ற கண் திரவ மருந்தைப் பயன்படுத்தியதால் கண் பார்வையை இழந்த மேலும் நான்கு நோயாளர்களுக்குத் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை செய்துகொண்ட பல நோயாளர்களுக்கு, அறுவை சிகிச்சைக்குப் பின் இந்த குறிப்பிட்ட 'பெட்ரிசிலோன் அசிடேட்' கண் திரவ மருந்தைப் பயன்படுத்தியதன் காரணமாகக் கண்பார்வை முற்றிலும் பறிபோனது அல்லது தொடர்ந்து பார்வை குறைவடைந்து சென்ற சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், முதற்கட்டமாகப் பாதிக்கப்பட்ட 17 நோயாளர்களுக்கு ஏற்கனவே அரசாங்கத்தினால் நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது.

நாட்டின் ஏனைய பிற அரசு மருத்துவமனைகளிலும் அதே காலப்பகுதியில் கண் சத்திரசிகிச்சையின்போது குறிப்பிட்ட மருந்தைப் பயன்படுத்தி யாராவது பாதிக்கப்பட்டுள்ளார்களா? என்பது குறித்து ஆராய விசேட தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவினர் நாடளாவிய ரீதியில் நடத்திய தீவிர சோதனைகள் மற்றும் சமர்ப்பித்த இறுதி அறிக்கையின் அடிப்படையில், விழிப்புலனை இழந்துள்ள மேலும் 4 நோயாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு வலுவான பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (ச-44)

# காலி, மகாமோதர பகுதியில் புதிய சிறைச்சாலை நிறுவல்

கொழும்பு,ஜூலை 9

காலி, மகாமோதர பகுதியில் புதிய சிறைச்சாலை ஒன்றை நிறுவுவதற்கான அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வெளியிட்டுள்ளார்.

இந்த புதிய சிறைச்சாலை வளாகம் உத்தியோகபூர்வமாக 'மகாமோதர சிறைச்சாலை' என அழைக்கப்படும்.

இந்தச் சிறைச்சாலையின் அதிகார வரம்பானது முழு நாட்டையும் உள்ளடக்கியதாக அமையும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் கைதிகள் நெருக்கடியைத் தொடர்ந்து, நாட்டின் சிறைச்சாலைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் அவசர நடவடிக்கையாக இந்தப் புதிய சிறைச்சாலை நிறுவப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நீர்கொழும்பு சிறை வன்முறைகள் உளவுத் தகவல் கிடைக்கவில்லை!

## சிறைச்சாலை பதில் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் குறித்து தமக்கு முன்கூட்டியே எந்தவித உளவுத்துறைத் தகவல்களும் கிடைக்கவில்லை என சிறைச்சாலைகள் பதில் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திங்கட்கிழமை நீதிமன்ற நடவடிக்கை நாள். பிணை கிடைப்பதற்கு சில கைதிகள் இருந்தனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும். கைதிகளை சந்திக்க உறவினர்களுக்கு இடமளிக்கவேண்டும். இவ்வாறான நிர்வாக நடவடிக்கைகளுக்காகவே திங்கட்கிழமை காலை அதிகாரிகள் சென்றனர். எனினும், போதைப்பொருள் பாவித்திருந்த கைதிகள், தாக்குதல் நடத்தி குழப்பம் விளைவித்துள்ளனர். இப்படியொரு சம்பவம் நடக்கும் என்பது குறித்து முன்கூட்டியே எந்தவொரு உளவுத் தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை.

அதிகாரிகளின் தலையீடு மற்றும் நிலைமையை கையாள்வதற்காகக் கூடுதல் பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டதை அடுத்து சிறைச்சாலை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது - என்றார். (ச-44)

# இறந்த சிறை அதிகாரிகளுக்கு நீதியமைச்சர் நேரில் அஞ்சலி!

கொழும்பு, ஜூலை 9

கடமையின்போது துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் உடலங்களுக்கு நீதி அமைச்சர் நேரில் சென்று தனது இறுதி மரியாதையை செலுத்தியுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, அனைத்துத் தரப்பினருக்கும் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் முழுமையான நியாயம் பெற்றுத்தரப்படும் என நீதியமைச்சர் உறுதியளித்தார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# சுழற்சி முறை அடிப்படையில் நெடுந்தீவில் மின்விநியோகம்

## மாணவர்கள் அந்தரிப்பு!

**யாழ்ப்பாணம்,ஜூலை 9**

**நெடுந்தீவு பிரதேசத்தில் கடந்த சில நாள்களாகச் சுழற்சி முறையில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருவதனால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.**

நெடுந்தீவில் பயன்பாட்டில் இருந்த மின்சார உற்பத்தி இயந்திரங்களில், சிறிய இயந்திரம் ஒன்று முழுமையாகப் பழுதடைந்துள்ளது. அதனைத் தற்போதைக்குத் திருத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே, இந்தச் சுழற்சி முறை மின்விநியோகம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அங்குள்ள பெரிய மின் உற்பத்தி இயந்திரம் இயங்கும் நேரத்தில் மட்டுமே முழுமையான மின்விநியோகம் வழங்கப்படுகிறது. சிறிய இயந்திரம் இயங்கவேண்டிய நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, சுழற்சி முறையில் விநியோகம் செய்யப்படுகிறது. எதிர்வரும் மாதத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும், அதனைத் தொடர்ந்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையும் நடைபெறவுள்ளன. பரீட்சைக்குத் தயாராகும் நெடுந்தீவு மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வி கற்பதற்கு இந்த மின்வெட்டு பெரும் தடையாக மாறியுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் தலையிட்டு புதிய இயந்திரத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

**திறைசேரி டொலர் மாயம்**

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பிக்கக் காலக்கெடு

கொழும்பு, ஜூலை 9

திறைசேரி கடன் மறுசெலுத்துகையின்போது, இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான 25 இலட்சம் அமெரிக்க டொலர் நிதிமோசடி செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் பாசன் அமரசேன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. (ச-இ)

## சுகீஸ்வர பண்டார மீண்டும் மறியலில்

கொழும்பு, ஜூலை 9

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட செயலாளராகப் பணியாற்றிய சுகீஸ்வர பண்டாரவை எதிர்வரும் ஜூலை மாதம் 22 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுகீஸ்வர பண்டார சார்பில் முன்வைக்கப்பட்ட பிணைக் கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்க சம்பள விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் முறையற்ற நிதிக் கையாடல் தொடர்பான விசாரணைகளின் நிமித்தம், மத்திய குற்றப்புலனாய்வுப் பணியகத்தினால் கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி சுகீஸ்வர பண்டார கைதுசெய்யப்பட்டார். (ச-இ)



## முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார கைது

முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார இலஞ்ச ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட விசாரணை ஒன்றின் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இலஞ்ச ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

**'டித்வா' சூறாவளியால்**

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2,341 மில்லியன் ரூபா இழப்பீடு

கொழும்பு, ஜூலை 9

கடந்த வருடம் ஏற்பட்ட 'டித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 12,341.5 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக அந்தச் சபை அறிவித்துள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக, முற்றாகப் பாதிக்கப்பட்ட 148,000 ஏக்கர் நெல் வயல்களுக்காக, 116,278 விவசாயிகளுக்கு 8,888.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் ஊடாக மகாவலி வலயங்கள், மாகாணங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான பகுதிகளில் மக்காச்சோளம், மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களைச் செய்கை பண்ணிய 85,747 விவசாயிகளுக்கு 3,453 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பயிர்ச்செய்கைக்காக ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், மக்காச்சோளம், மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்களின் ஒரு ஹெக்ரேயருக்கு 2 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பதவி படுத்திற பாடு

பணத்தை இழந்தாலும் கனபேர் பதவியை இழக்க விரும்பாயினம். அதாலதான் பதவிச்சண்டையள் கூடவா இருக்குது. அப்பிடி ஒரு பதவிச்சண்டை வவுனியாவில வீட்டுக்கட்சிக்குள்ள நடக்குதாம். வவுனியா வடக்குப் பிரதேசசபைக்கு பொம்பிளை ஒராள் தான் இப்ப தவிசாளரா இருக்கிறா. ஆனால் அவாவை மாத்திப்போட்டு, இன்னொரு ஆளை தவிசாளராப் போடுறதுக்கு வீட்டுக்கட்சியின்ர மாவட்டக்கிளை முடிவெடுத்திருக்காம். அதால தவிசாளர் அம்மணி கடும் அப்செட்டில இருக்கிறா. அவாவை பதவியில இருந்து தூக்கிறதுக்கு ஏன் வீட்டுக்கட்சி இப்பிடி அந்தரப்படுது எண்டதுக்கு ஒரு முன்கதைச் சுருக்கம் இருக்குது.

உள்ளூராட்சி சபை எலக்சன் முடிஞ்சவுடன வவுனியா வடக்குப் பிரதேசசபைக்கு வேற ஒரு ஆளைத்தான் தவிசாளராப் போட வீட்டுக்கட்சி நினைச்சது. ஆனால் அதுக்கிடையில இந்த அம்மணி கட்சியின்ர மேல் மட்டத்தோட 'எனக்குத்தான் தவிசாளர் பதவி தரோணும்' எண்டு கடுமையாச் சண்டை பிடிச்சிருக்கிறா. ஒரு பொம்பிளை, இப்பிடித் துணிஞ்சு அரசியலுக்கு வந்து வெண்டுமிருக்கிறா. அதால அவாக்கு தவிசாளர் பதவியைக் குடுக்கிறதும் நல்லதுதான் எண்டு கட்சி மேல் மட்டம் நினைச்சிருக்குது. ஆனால் பெரும்பாலான மெம்பர்மார் இன்னொரு ஆளுக்குக் குடுக்கிறதைத்தான் விரும்பியிருக்கினம். அதால ரண்டு பக்கத்தையும் பாதிக்காதமாதிரி ஒரு முடிவை கட்சி அப்ப எடுத்திருக்குது. 'முதல் ஒரு வருசம் தவிசாளர் பதவியில அந்த அம்மணி இருக்கட்டும். பிறகு மற்றவர் தவிசாளரா இருக்கட்டும். இப்பிடி ரொட்டேசனில நாலுபேரை தவிசாளராப் போடுவம்' எண்டதுதான் அந்த முடிவு. அதுக்கு ஓமெண்டு அம்மணியும் தவிசாளரா வந்திட்டா. என்னதான் கேட்டு வாங்கின பதவியா இருந்தாலும், ஒரு தவிசாளருக்குரிய வேலையளையும், பொறுப்பையும் அவா சரியாச் செய்ததால சனத்திட்டையும் ஒரு வரவேற்பு வரத்தொடங்கிட்டுது. அதைவிட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலையும் சனத்தின்ர பிரச்சினையளை துணிஞ்சு கதைச்சு எல்லாரையும் திரும்பிப் பாக்க வைச்சிருக்கிறா. இது மற்றவைக்கு வயித்தெரிச்சலைக் கிளப்பிட்டுது. விட்டால் அவாவே நிரந்தர தவிசாளரா வந்திடுவா போல எண்டுட்டு, முந்தி ஒப்புக்கொண்டபடி தவிசாளர் பதவியை ரிசைன் பண்ணச்சொல்லி மாவட்டக் கிளைக் கூட்டத்தில சொல்லியிருக்கினமாம்.

அதுக்கு அந்த அம்மணி மாட்டன் எண்டிட்டாவாம். 'இப்பதான் நான் உள்ளூராட்சி சபை பற்றி அறிஞ்சு சில வேலையளைச் செய்யத் தொடங்கியிருக்கிறன், அதுக்குள்ள பதவியை விடச்சொன்னால் அந்த வேலைத் திட்டங்கள் எல்லாம் இடையில நிண்டிடும். எனக்கு இன்னும் ஒரு வருசம் தாங்கோ' எண்டது அவான்ர தரப்பு வாதமாம். ஆனால் கட்சி 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இப்ப முரண்டு பிடிச்சால் அடுத்தமுறை எலக்சனிலையே நிக்கவிடமாட்டம்' எண்டு சொல்லிப் போட்டினமாம். இப்ப தவிசாளர் கட்சியிட்ட தான் தவிசாளர் பதவியை ரிசைன் பண்ற கடிதத்தைக் குடுத்திட்டா எண்டு ஒரு கதை அடிபடுகுது. இப்பிடியே வருசத்துக்கொரு தவிசாளராப் போட்டுக்கொண்டிருந்தா, அந்த அரசியல்வாதியளுக்கு தங்கட பேருக்கு முன்னால 'முன்னாள் தவிசாளர்' எண்டு போடத்தான் உதவுமே தவிர சனத்துக்கு உருப்படியா ஒண்டுமே செய்யேலாது. சுழற்சி முறையில தவிசாளர் பதவிகுடுக்கிறதெண்டால் குறைஞ்சது ரண்டு வருசமாவது குடுத்தால் தான் அவையளாலும் உருப்படியா சனத்துக்கு ஏதும் செய்ய முடியும் எண்டது வீட்டுக்கட்சித் தெரியாது போல.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 05 . 1956



மறைவு
20 . 06 . 2025

யாழ். நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,
பிரித்தானியா Harrow ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அசோகமலர் அருந்தவநாதன் (மாலா)

**திதி: 09.07.2026**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் அன்புக்கு ஈடு இல்லை
தாயின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது."

இன்று நீ எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்,
ஒவ்வொரு நாளும் உன் நினைவுகளோடு தான் எங்கள் வாழ்க்கை நகர்கிறது.

உன் அன்பான வார்த்தைகள்,
உன் பாசமான கரங்கள்,
உன் தியாகம் நிறைந்த வாழ்க்கை
இவை அனைத்தும் எங்கள் மனதில் என்றும் அழியாத பொக்கிஷங்கள்.

உன் உடல் எங்களோடு இல்லாவிட்டாலும்,
உன் ஆன்மா இறைவனின் திருவடியில் அமைதியாக இளைப்பாறட்டும்.
என்றும் எங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாய் என்ற நம்பிக்கையோடு வாழ்கிறோம்.

ஒவ்வொரு தீபம் ஏற்றும் வேளையிலும்,
ஒவ்வொரு பிரார்த்தனையிலும்,
ஒவ்வொரு நல்ல செயலிலும்
உன் நினைவை வணங்குகிறோம்.

அம்மா,
உன் அன்பு எங்கள் உயிரின் மூச்சு,
உன் நினைவு எங்கள் வாழ்வின் வழிகாட்டும் ஒளி.

உன் முதல் ஆண்டு நினைவு நாளில்,
கண்ணீர் மல்க, நன்றியுடனும் அளவற்ற அன்புடனும்
உனக்கு எங்கள் இதயபூர்வமான அஞ்சலியை செலுத்துகிறோம்.
"ஓம் சாந்தி... உன் ஆன்மா இறைவனின் திருவடியில்
நித்திய அமைதி பெறட்டும்."

**பிரிவால் துயருறும்**
**நாதன் (கணவர்), பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS/32107) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## அறப்போர் ஓய்வதில்லை!

ஈழத்தமிழர்களின் குருதிபடிந்த வரலாற்றில் ஜூலை 9 ஆம் திகதி என்பது கறுப்புப்பக்கங்களால் எழுதப்பட்ட ஒரு பெருந்துயர நாளாகும். 1995 ஆம் ஆண்டு இதே நாளில், யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியைக் கைப்பற்றும் நோக்குடன் சிறிலங்கா இராணுவத்தினால் 'முன்னேறிப்பாய்தல்' என்ற பாரிய இராணுவ நடவடிக்கை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அப்போது வீசிய எறிகணை வீச்சுகளுக்கும் குண்டுமழைக்கும் அஞ்சி, தங்களின் பூர்வீக நிலங்களை விட்டு உடுத்த துணியோடு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள், ஆன்மிகத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், அருகிலிருந்த சின்னக்கதிர்காமம் ஆலய வளாகத்திலும் தஞ்சமடைந்திருந்தனர். ஆனால், சர்வதேசப் போர் விதிகளை அப்பட்டமாக மீறி, அந்த அப்பாவி மக்கள் மீது 'புக்காரா' ரக போர் விமானங்கள் மூலம் கொடூரமான முறையில் குண்டுகளை வீசி, குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 147 உயிர்களை ஒரே கணத்தில் சிறிலங்கா வான்படை துடிதுடிக்கப் பலிகொண்ட கொடூரத்தின் 31ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

நவாலித் தேவாலயப் படுகொலை என்பது ஏதோ தற்செயலாக நடந்த விபத்து அல்ல; அது திட்டமிட்டு நடத்தப்பட்ட அப்பட்டமானதொரு போர்க்குற்றமாகும். கத்தோலிக்க மதகுருமார்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகப் பொதுமக்கள் தஞ்சமடைந்திருக்கும் விவரத்தைத் தெளிவுபடுத்தியிருந்த நிலையிலும், வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்து நிகழ்த்தப்பட்ட இந்த வான்வழித் தாக்குதல், தமிழ் இனம் எங்குமே பாதுகாப்பாக வாழக் கூடாது என்ற பேரினவாத வெறியின் உச்சக்கட்ட வெளிப்பாடாகும். அன்று சிதறிய உடலங்களையும், தேவாலயக் சுவர்களில் உறைந்துபோன இரத்தக் கறைகளையும், உறவுகளை இழந்து கதறிய மக்களின் அவலக்குரல்களையும் முப்பது ஆண்டுகள் கடந்தும் தமிழ் நெஞ்சங்களால் மறக்கவோ, மன் னிக்கவோ முடியாது.

காலங்கள் முப்பது உருண்டோடிவிட்ட போதிலும், நவாலி மண்ணில் சிந்திய இரத்தத்துக்கு இன்னமும் நீதியோ அல்லது பரிகாரமோ கிடைக்கவில்லை என்பதுதான் உலகளாவிய மனித உரிமைப் பொறிமுறைகளின் ஆகப்பெரும் தோல்வியாகும். அன்று முதல் இன்று வரை கொழும்பில் ஆட்சிப் பீடமேறிய எந்தவொரு அரசாங்கமும் இத்தகைய அரச பயங்கரவாதக் குற்றங்களை ஒப்புக்கொள்ளவோ, இதற்குக் காரணமான வான்படை அதிகாரிகளைக் கூண்டில் நிறுத்தவோ முன்வரவில்லை. தற்போதைய 'மாற்றத்துக்கான' திசைகாட்டி அரசாங்கமும் கடந்த காலப் போர்க்குற்றங்களைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்து, குற்றவாளிகளைத் தேசிய வீரர்களாகப் பாதுகாக்கும் பழைய ஒற்றையாட்சிப் பாதையி லேயே பயணிக்கின்றது.

நினைவுகளை அழிப்பதன் மூலமே ஒரு இனத்தின் நீதிக்கான போராட்டத்தை மழுங்கடித்துவிடலாம் எனப் பேரினவாதம் கணக்குப் போடுகிறது . முள்ளிவாய்க்கால் வரை நீடித்த தமிழ் இனப்படுகொலையின் தொடக்கப்புள்ளிகளில் ஒன்றான நவாலிப் படுகொலைக்குச் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் முறையான பரிகார நீதி கிடைக்கும் வரை எமது நினைவு கூர்தல்களும் அறப் போராட்டங்களும் ஓயப்போவதில்லை.



### பொய்யாமொழி

**அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்**

**பொருள்:** பொறாமை உடையவனைக் கண்டு திருமகள் வெறுத்து அவனைத் தன் தமக்கையான மூதேவிக்குக் காட்டி, தான் அவனை விட்டு நீங்கிப் போய்விடுவாள்.



## டெங்கு உயிரிழப்பு 42 ஆக உயர்வு



**கொழும்பு, ஜூலை 9**
**நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 63,835 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன், 42 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இம்மாதத்தில் மாத்திரம் 8,450 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் மருத்துவர் கபில கண்ணங்கர குறிப்பிட்டார். தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் விசேட டெங்குஒழிப்பு வேலைத்திட்டங்கள், எதிர்வரும் நாள்களிலும் தீவிரமாகத் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். பொதுமக்கள் தங்களைச் சுற்றியுள்ள இடங்களைச் சுத்தமாகப் பேணுவதன் மூலம் டெங்குத் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-இ)

## ஹெரோய்னுடன் சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜூலை 9
வத்தளை, எந்தேரமுல்ல பகுதியில் 3 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 35 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 2.325 கிலோகிராம் ஹெரோய்ன் கையிருப்புக் கைப்பற்றப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, இந்தச் சந்தேகநபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவொன்றின் போதைப்பொருள் கடத்தல்காரரின் வலையமைப்போடு தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## நாமலின் கிரிஷ் வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 9
கிரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதி அபரண சுவந்துருகொட முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த வழக்கில் தொடர்புடைய இரண்டு இந்தியப் பிரஜைகளான சாட்சிகளுக்கு, வெளிநாட்டுச் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பும் நடைமுறையின்கீழ் அழைப்பாணை அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ச-இ)

## ரயில் பெட்டி தடம்புரள்வு

கொழும்பு, ஜூலை 9
கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் ரம்புக்கனை நோக்கிப் பயணிக்கவிருந்த ரயிலின் பெட்டியொன்று தடம்புரண்டுள் ளது. ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் மேடைக்கு அருகில் வந்துகொண்டிருந்தபோதே இந்தத் தடம்புரள்வு நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தின் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் நான்கு ரயில் மேடைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நன்னடத்தைத் திணைக்களத்தின் புதிய ஆணையாளராக மதீஷா

கொழும்பு, ஜூலை 9
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக் களத்தில் வெற்றிடமாக நிலவிய ஆணையாளர் பதவிக்கு, இலங்கை நிர்வாகசேவையின் தரம் I அதிகாரியான யூ.எல். மதீஷா ஜினஞ்சலி ஜயதிலகவை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவர் இதற்கு முன்னர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் பணிப்பாளராகப் பணியாற்றி வந்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட இதுதொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை-ஆனி 26 10.07.2026
சுபநேரம் : 05.58 – 7.28
ராகுகாலம் : 10.28 – 11.58




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நயினாதீவின் நன்னீர்வளம் களஆய்வுடன் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
நயினாதீவின் நன்னீர்வளம் பற்றிய களஆய்வும், மக்கள் சந்திப்பும் இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்படும். சுவீடன் விவசாயப் பல்கலைக்கழகப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில், யாழ். பல்கலைக்கழக நீர்வளத்துறை மாணவர்கள் இணைந்து இரண்டாவது முறையாக ஆராய்ச்சி மற்றும் மக்களுடன் இணைந்த களச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளனர். இதில் நயினாதீவின் நன்னீர் வளங்களைப் பாதுகாப்பது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவது மற்றும் எதிர்காலத் தலைமுறைகளுக்கான நீர்வள முகாமைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும். (க)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் கல்லூரியின் சிவஞானசோதி கலாசார மண்டபத்தில் கல்லூரியின் முதல்வர் த. தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தேசிய மருத்துவ கலாநிதி உ. மயூரதன் சிறப்பு அதிதியாக வலிகாமம் வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-63)

## பரந்தன் – முல்லை பாலம் இம்மாத இறுதியில் திறப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 9
கிளிநொச்சி, பரந்தன் - முல்லைத்தீவு இடையிலான ஏ-35 பிரதான வீதியில், நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுப் பல விபத்துகளுக்கும், மரணங்களுக்கும் காரணமாயிருந்த பாலம் தற்போது 95 சதவீதப் பணிகள் நிறைவடைந்து, இம்மாத இறுதிக்குள் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்படவுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்குக் காரணமாக, ஏ-35 வீதியில் அமைந்திருந்த இந்தப் பாலம் பலத்த சேதமடைந்தது. இதனைத் தொடர்ந்து இதற்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், நாட்டின் நிதி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த 2023ஆம் ஆண்டில் பணிகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டு கைவிடப்பட்டன. பாலத்தின் கட்டுமானப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டதால், அந்தப் பகுதியில் முறையான பாதுகாப்புச் சமிக்ஞைகளோ, எச்சரிக்கைப் பலகைகளோ வைக்கப்படவில்லை. இதன் விளைவாக, இரவுவேளைகளில் இந்தப் பாதையூடாகப் பயணித்த வாகனங்கள் பாலத்தடியில் விபத்துக்குள்ளாகி, இதுவரை நான்கு பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.
இந்தநிலையில் வடமாகாண ஆளுநர் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ஆகியோரின் கூட்டுத் துரித முயற்சியின் காரணமாக, நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு பாலத்தின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இந்தப் பாலத்தின் 95 சதவீதத்துக்கும் அதிகமான வேலைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. இம்மாத இறுதிக்குள் இந்தப் பாலத்தை மக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்காக திறந்துவிடத் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-55)

# தமிழர் வாழ்வியலில் பனை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 9
தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் முனைவர். மனோன்மணி சண்முகதாஸ், சுவிற்சலாந்தில் வாழ்ந்துவரும் திருமதி அமுதா அன்புழகன்ஆகியோர்இணைந்து எழுதிய தமிழர் வாழ்வியலில் பனை நூலின் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யோ.நிவேதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் வாழ்த்துரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசியர் பூ. ஜங்கரன் நூலை வெளியிட்டு வைப்பார். நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் சைவப் புலவர் கு. ரஜீபன் நூல்வெளியீட்டுரையையும், அதிபர் ந. விஜசுந்தரம் நூலின் அறிமுக உரையையும் ஆற்றுவர். இறுதியாக நூலாசிரி யர் முனைவர்.மனோன்மணி சண்முகதாஸ் ஏற்புரையை வழங்குவார். (ச-66)



## சம்பூர் படுகொலை நினைவேந்தல்

கொழும்பு, ஜூலை 9
மூதூர் கிழக்கு , சம்பூர் படுகொலைச் சம்பவத்தின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சம்பூர் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
இதன்போது சம்பூர் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக தீபச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்தோடு ஒரு நிமிட மௌன பிரார்த்தனையும் இடம்பெற்றது.
நிகழ்வில் சம்பூர் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
1990.07.07 அன்று சம்பூர் பகுதியில் வைத்து சீருடை அணிந்த, ஆயுதம் தாங்கிய படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 57 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர்ப் பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்கள் முடிவது இழுபறியாகி மனச் சஞ்சலம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார்.

**விருச்சிகம்:** தெய்வ அனுகிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குத் தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சமூக ஊடக பயன்பாட்டுத் தடை

## ஆராய்கின்றது அரசாங்கம்

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைக் கட்டுப்படுத்துவது அல்லது முழுமையாகத் தடை செய்வது குறித்து அரசாங்கம் தீவிர அவதானம் செலுத்தி வருவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை பரிசீலிக்கப்பட்டுவருகிறது. இதுதொடர்பான யோசனைகள் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் முதற்கட்டக் கலந்துரையாடல்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இத்திட்டத்தை முறையானவகையில் நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கமும், 'வேர்ள்ட் விஷன்' அமைப்பும் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்தார். (எ-இ)



# விலைச்சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலைக் குறைப்பு!


## அமைச்சர் பிமல் உறுதி

கொழும்பு, ஜூலை 9

மாதாந்த எரிபொருள் விலைச்சூத்திரத்திற்கு அமைய, எதிர்வரும் மாதத்தில் எரிபொருள் விலைகள் குறைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்படுவதைத் தொடர்ந்து, அதற்கு இணையான நிவாரணத்தை மக்களுக்கு வழங்கும்வகையில் பேருந்துக் கட்டணங்களும் உடனடியாகக் குறைக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் எரிபொருள் விலை மாற்றங்களுக்கு அமைவாக, போக்குவரத்துத் துறையில் உரிய சீரமைப்புகளும் சேவைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (எ-இ)



# நீர்கொழும்பு சிறைப் படுகொலைக்கு நீதியமைச்சர் பதவிவிலக வேண்டும்!

## சீலரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் கைதிகளின் மரணங்களுக்குப் பொறுப்பேற்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உடனடியாகத் தனது பதவியை விட்டு விலகவேண்டும் என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் மற்றும் கைதிகளின் மரணங்கள் குறித்த விவரங்களை நாடளாவிய ரீதியில் உள்ள மக்கள் சமூக ஊடகங்கள் வாயிலாகவே ஒரு சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் அறிந்துகொள்ளவேண்டிய அவலநிலை ஏற்பட்டது. நாடாளுமன்றத்திலும் நீதிமன்றத்திலும் சட்டம் பேசும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு சிறிதேனும் குற்ற உணர்வு இருக்குமானால், இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று தனது பதவியை விட்டு உடனடியாக விலகவேண்டும். இந்த வன்முறைச் சம்பவத்தில் அப்பாவி சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கொல்லப்பட்டுள்ளார். நாட்டில் போதைப்பொருள் மாபியாவை 100 வீதம் ஒழித்து, சிங்கள இனத்தையும் ஏனைய ஒட்டுமொத்த குடிமக்களையும் பாதுகாப்போம் என்ற வாக்குறுதியை வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சியைப் பிடித்தது. ஆனால் சிறைச்சாலைக்குள்ளேயே பாதாளக்குழுவினர் அட்டகாசமிடுகின்றனர். தற்போது சிறைச்சாலை திணைக்களத்தை வழிநடத்தும் அதிகாரி தற்காலிகமாகவே நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்துக்குள் இருக்கும் காழ்ப்புணர்ச்சி மற்றும் பேராசை காரணமாகவே தகுதியான அதிகாரிகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படுவதில்லை. இதனால் சிறைச்சாலை நிர்வாகம் முற்றிலும் முடங்கி, அதிகாரிகள் எவ்வித தீர்மானங்களையும் எடுக்க முடியாமல் துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவத்தின் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை நாட்டுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி உடனடியாக ஒரு விசேட குழுவை நியமித்து, இந்தச் சிறைச்சாலை படுகொலைகள் மற்றும் முறைகேடுகள் குறித்து முறையான விசாரணையை நடத்தவேண்டும் -என்றார். (ச-இ)

# கோப்பாய் கலாசாலையில் விழிப்புணர்வு நிகழ்வுகள்

கொழும்பு, ஜூலை 9

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாராந்த விசேட ஒன்றுகூடல் மரபுத் தமிழ் இலக்கியங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் அகில இலங்கை இளங்கோ கழக அமைப்பாளரும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியருமான பரா. ரதீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இலக்கியம் காட்டிய மானிட அளவு கோல் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் தமிழ்ப் பாடநெறி விரிவுரையாளரும், கவிஞருமான வேல். நந்தகுமார் அதிதிக்கான அறிமுக உரையை வழங்கினார். அதிதிப் பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

# டொலரின் விற்பனை விலை அதிகரிப்பு



கொழும்பு, ஜூலை 9

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை சற்று அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 339.73 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் இதன் விற்பனை விலை 339.59 ரூபாவாகக் காணப்பட்டது.

வெளிநாட்டு நாணயச் சந்தையின் நகர்வுகள் மற்றும் பொருளாதாரக் காரணிகளுக்கு அமைய நாணய மாற்று விகிதங்களில் இத்தகைய தினசரி மாற்றங்கள் ஏற்படுவதாகப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (எ-இ)



# கபிலவின் பகுப்பாய்வு அறிக்கையை விரைவாக வழங்குமாறு நினைவூட்டல்


ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன இறந்து கிடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அடையாளம் தெரியாத மருந்துகள் தொடர்பான அறிக்கையை விரைந்து சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பியுள்ளது.

இவ்வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் அழைக்கப்பட்ட போது, கண்டெடுக்கப்பட்ட மருந்துகள் தொடர்பான இரசாயன பகுப்பாய்வு அறிக்கையும், பிரேத பரிசோதனை அறிக்கையும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். இதனையடுத்தே, இரசாயனபகுப்பாய்வுதிணைக்களத்திற்கும் கொழும்பு சட்டமருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கும் உடனடி நினைவூட்டல் கடிதங்களை அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டார். இவ்விசாரணைகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக வழக்கு வரும் ஜூலை 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களினால் கல்லூரியின் பயன்பாட்டுக்கென ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. பழையமாணவியான திருமதி சஞ்சீவன் ரஞ்சிதாவால் மேற்படி ஒலிபெருக்கி சாதனங்கள் கல்லூரியின் அதிபர் நடராஜா கந்தவனச்செல்வனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ச)



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ. த.க.பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வடக்கு கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே. ஞானசீலன் பங்கேற்றார். (ச-9)



# மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 9

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய ஆடிவேல் விழாவை முன்னிட்டுத் தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நிலையான சமாதானத்துக்கான மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இளைஞர்களின் கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை நேற்றுப் புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து ஆரம்பமானது.

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் கே.டி.சி.காமினி, தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் வினோதினி சிறிமோகன், தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலய உயரதிகாரிகள், மன்றத்தின் இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

சாவகச்சேரி நகர் பூவேந்தன் முன்பள்ளி மாணவர்களின் சிந்தனை செயற்றிறனை ஊக்குவிக்கும்முகமாக வேடந்தாங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி சாரதா சுந்தரலிங்கம், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-159)






# சுவிஸ் தூதுவருடன் ரெலோ கட்சி சந்திப்பு!

தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்து கொள்ளும் சுவிற்சலாந்தின் இலங்கைக்கான தூதுவர் சிரி வால்ட்டை தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பிரதிநிதிகள் சுவிஸ் தூதரகத்தில் நேற்று முன்தினம் மரியாதையின் நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது தூதுவரின் பதவிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான தொடர் முயற்சிகளை மேற்கொண்டமைக்கு நன்றி கூறப்பட்டது. மேலும் தமிழ் மக்களின் இன நலன் சார்ந்த விடயங்களில் சுவிஸ் தூதரகமும் கடந்த கால தூதுவர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் சார்பில் தாங்கள் வரவேற்பதாகவும் தொடர்ந்தும் இந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆகிய செல்வம் அடைக்கலநாதன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதி தலைவரும் பேச்சாளரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வடமாகாண தேசிய அமைப்பாளருமான குருசுவாமி சுரேந்திரன் மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளருமான செந்தில்நாதன் மயூரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-127)

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 11 . 1947



இறப்பு 08 . 07 . 2026

### சின்னக்குட்டி கிருஷ்ணர்

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கிருஷ்ணர் அவர்கள் நேற்று (08.07.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சின்னக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலம்சென்றவர்களான நடேசு - யோகம்மா தம்பதியரின் மருமகனும், ரேவதியின் அன்புக் கணவரும், மதியழகன், மதிரூபி, ஸ்ரீபிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், சிவரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, அக்ஷயன், அட்சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(ES 32115) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்




இன்றைய தினம் [09.07.2026] BMICH ல் P.G.D.E.M பட்டம் பெறும் எமது பாடசாலை முதல்வர்

**திரு சுந்தரலிங்கம் சுஜதீப்**

அவர்களை வாழ்த்தி மனமகிழ்வதோடு மேலும் கல்வியில் சிகரங்களைத் தொட இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

நல் வாழ்த்துக்களுடன்
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலை

# அமெ. போர்விமானங்கள் ஈரான் மீது குண்டு மழை!

தெஹ்ரான், ஜூலை 9



**தெற்கு ஈரானின் சிரிக், குவாசிம் தீவு, பண்டர் அப்பாஸ் மற்றும் கார்க் தீவு ஆகிய பகுதிகளில் உள்ள 80க்கும் மேற்பட்ட முக்கியமான இராணுவ இலக்குகளைக் குறி வைத்து அமெரிக்கா நேற்றுத் தீவிர தாக்குதல் நடத்தியுள்ளது.**

ஈரானின் ரேடார் அமைப்புகள், ஏவுகணைத் தளங்கள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை இலக்கு வைத்து இத்தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஹோர்மூஸ் நீரிணை வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்களுக்கு ஈரான் கட்டணம்விதித்ததுடன், அனுமதியின்றிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என எச்சரித்திருந்தது. இதற்கமைய, நேற்று ஓமன் வளைகுடா பகுதியில் ஹோர்மூஸ் நீரிணையைக் கடக்க முயன்ற 3 சரக்குக் கப்பல்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அமெரிக்கா தற்போது ஈரான் மீது இந்த அதிரடித் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. மத்திய கிழக்கில் ஏற்கனவே ஏற்பட்ட அமைதி உடன்படிக்கை மீறப்பட்டு, மீண்டும் பதற்றம் உச்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# இந்து சமுத்திரத்தின் மேல் போயிங் 737 விமானம் மாயம்



கராச்சி, ஜூலை 9

ஷார்ஜாவில் இருந்து கராச்சி நோக்கிப் பயணித்த பாகிஸ்தானுக்குச் சொந்தமான போயிங் 737 ரக சரக்கு விமானம், இந்து சமுத்திரத்தின் மேல் பறந்துகொண்டிருந்தபோது திடீரென ரேடார் தொடர்பிலிருந்து விலகி காணாமல் போயுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சரக்கு விமானத்தில் ஐந்து பேர் பயணம் செய்துள்ளதாக ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானத்துடனான தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், காணாமல்போன விமானத்தைக் கண்டறிவதற்காகச் சம்பந்தப்பட்ட கடல் பிராந்தியத்தில் தீவிர தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (எ-இ)

# மொனாக்கோ குண்டுவெடிப்பு சந்தேகநபர் சடலமாக மீட்பு

கீவ், ஜூலை 9

உலகப் பணக்காரர்களின் புகலிடமான மொனாக்கோவில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய உக்ரைன் நாட்டைச் சேர்ந்த அனஸ்தாசியா பெரெசோவ்ஸ்கா என்பவர் உக்ரைனில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள் ளார்.

மொனாக்கோவில், உக்ரைன் தொழிலதிபர் வாடிம் எர்மோலேவ் என்பவரைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனஸ்தாசியாவை மொனாக்கோ பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாகத் தேடி வந்தனர். இந்நிலையில், அவர் உக்ரைனில் கொலை செய்யப்பட்டுள்ளார். முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரின் உதவியுடன் அனஸ்தாசியாவைத் தாமே கொலை செய்ததாக உக்ரைன் இராணுவ உளவு அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல், தனிப்பட்ட முடிவின் காரணமாகவே இக்கொலையைச் செய்ததாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளதாக உக்ரைன் அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இக்கொலைச் சம்பவம் தொடர்பாக உக்ரைன் மற்றும் மொனாக்கோ பாதுகாப்புத் துறையினர் இணைந்து தீவிர மேல் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

# சீனாவில் பேய் மழை இதுவரை 20 பேர் சாவு

சீனாவில் பெய்து வரும் வரலாறு காணாத கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். 62க்கும் மேற்பட்ட முக்கியமான நதிகளில் வெள்ள நீர் அபாயக் கட்டத்தைத் தாண்டிப் பாய்வதால், 4,800க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 54 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, வெள்ளத்தினால் கடுமையாகச் சேதமடைந்த பூங்கா ஒன்றிலிருந்து சுமார் 900 பாம்புகள் தப்பியமையால் பொதுமக்கள் கடும் அச்சமடைந்துள்ளனர். தப்பிய பாம்புகளில் பெரும்பாலானவை விஷமற்றவை எனக் கூறப்பட்டாலும், அவற்றைப் பிடிப்பதற்காகச் சிறப்பு மீட்புக்குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. அதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துமாறு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தடையற்ற மருத்துவச் சிகிச்சையையும், உயிர் மற்றும் உடைமைகளுக்கான பாதுகாப்பையும் உறுதிசெய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். தற்போது அப்பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கைதிகள், அதிகாரிகள் பாதுகாப்பு உறுதிசெய்வது அரசின் கடமை!



## ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 9**

**சிறைச்சாலை அமைப்பில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அங்குள்ள கைதிகள் ஆகிய இரு தரப்பினருமே கூடுதல் பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள். என்றும், அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்எண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார். நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட சம்பவம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.**

அதில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:-

இந்தத் துயரச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன்.

சிறை அதிகாரிகள் அரசுக்கும் பொதுமக்களுக்கும் சேவை செய்வதில் சவாலான மற்றும் கடினமான கடமைகளை மேற்கொள்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கைதிகள் அரசின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பின்கீழ் இருந்தவர்கள் என்பதால், சிறைச்சாலை அமைப்பில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அங்குள்ள கைதிகள் ஆகிய இரு தரப்பினருமே கூடுதல் பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள். அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும்.

சிறைச்சாலைகளில் காணப்படும் அதிகளவிலான நெருக்கடி, காலாவதியான நடைமுறைகள் மற்றும் தடுப்புக்காவல் நிலையங்களில் உள்ள வசதிக்குறைபாடுகள் ஆகியவை இலங்கையிலும் உலகளவிலும் உள்ள சிறைச்சாலை அமைப்புகளில் காணப்படும் பெரும் சவால்களாகும். இந்தச் சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக சுயாதீனக்குழுவொன்று நிறுவப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை பாராட்டுவதுடன், அந்தக் குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டும்.

சிறைச்சாலைப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், தடுப்புக்காவல் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சிறைச்சாலை ஊழியர்களின் நலனை உயர்த்துதல் ஆகியவற்றுக்காக, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட தொடர்ச்சியான ஆதரவை இலங்கைக்கு வழங்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது- என்றார். (ச-இ)

# கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## காவிந்த எம்.பி. தெரிவிப்பு!

கொழும்பு, ஜூலை 9

பொதுமக்களினதும், சிறைக்கைதிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும். நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலின் பின்னணி மற்றும் அங்கு விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு குறித்த உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது, சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட சுமார் 25 க்கும் மேற்பட்டோர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதேபோல் சிறைக்கைதிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு.

மோதலின் உண்மைத் தன்மையையும், அதன் பின்னணியையும் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். சிறைச்சாலைகளில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் பௌதீகப்பிரச்சினைகளுக்கு உடன் தீர்வுகாணவேண்டும்- என்றார். (ச-இ)



# சிறை வன்முறைக்கு காரணம் அரசாங்கத்தின் அலட்சியமே!

## அஜித் பி.பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் மற்றும் உயிரிழப்புகளுக்கு தற்போதைய அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகமும், பொறுப்பற்ற பாதுகாப்பு வழிமுறைகளுமே நேரடி காரணமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள இந்த மோதல் சம்பவம் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல் என்று தற்போது புலனாய்வு அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த மோதல் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிக்கே ஆரம்பமாகியுள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், திங்கட்கிழமை காலை வரை பாதாள உலக மோதலுடன் தொடர்புடைய இரு குழுக்களையும் சிறைச்சாலைக்குள்ளேயே ஒன்றாக வைத்திருக்க அனுமதித்தது யார்?

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், திங்கட்கிழமை காலை வரை எவ்வித முறையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்குப் பொறுப்பான அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஞாயிற்றுக்கிழமை மதியம் முதல் திங்கட்கிழமை மாலை வரை சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை நேரில் ஆராயவில்லை.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவராத பாரதூரமான தவறு மற்றும் பொறுப்பற்ற தனத்தில் இருந்து இந்த அரசாங்கத்தால் தப்ப முடியாது. உயிரிழந்த மனிதர்களின் உயிர்களையோ அல்லது உடல் உறுப்புகளை இழந்தவர்களின் வாழ்க்கையையோ இனி யாராலும் மீட்டுக் கொடுக்க முடியாது - என்றார். (ச-இ)

# சிறைச்சாலை வன்முறைக்கு எதிர்ப்பு கறுப்புப்பட்டியணிந்து வந்த எதிர்க்கட்சி

கொழும்பு, ஜூலை 9

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளிடையே ஏற்பட்ட கொடூர வன்முறைச் சம்பவத்துக்கு தங்களது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று புதன்கிழமை கறுப்புப்பட்டி அணிந்து நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டனர். சிறைச்சாலைகளுக்குள், பாதாள உலகக் கும்பல்களும் போதைப்பொருள் மாபியாக்களும் புகுந்து வன்முறையை அரங்கேற்றியுள்ளமை தற்போதைய அரசின் ஒட்டுமொத்த பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைத் தோல்வியைக் காட்டுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினர். (ச-இ)

# சிறை மோதலுக்கான சூழலை அரசே ஏற்படுத்திக்கொடுத்தது

## நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9

போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கை ஊடான கைதுகளினால் சிறைச்சாலை நெரிசல் தீவிரமடைந்துள்ளது. நீர்கொழும்பு மோதல் சம்பவத்தை முதல் நாளே முறையாக கட்டுப்படுத்தியிருந்தால் இரண்டாம் நாள் மோதல் ஏற்பட்டிருக்காது. மோதல் தீவிரமடைவதற்கான சூழலை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறைச்சாலைச் சம்பவம் அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

முதல் நாள் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை முறையாக கட்டுப்படுத்தியிருந்தால் இரண்டாம் நாள் மோதல் ஏற்பட்டிருக்காது. ஆனால் அரசாங்கம் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை. அரச நிர்வாகக் கட்டமைப்பு முழுமையாக அரசியல் மயமாகியுள்ளதால் அரச ஊழியர்களால் தனித்துவமான முறையில் தீர்மானம் எடுக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது. அப்போது சிறைச்சாலைக்கு பொறுப்பான அமைச்சர் பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டன. ஆனால் தற்போது அவ்வாறான தன்மை இடம்பெறவில்லை.

சிறைச்சாலைகளில் 10 ஆயிரம் கைதிகள் இருப்பதற்கான பௌதீக வளமே காணப்படுகிறது.

ஆனால் தற்போது போதைப்பொருள் தொடர்பான கைதுகள் தீவிரமடைந்துள்ளன.

40 மற்றும் 45 ஆயிரம் பேரை சிறையில் அடைக்கும்போது சிறைச்சாலையின் நெரிசல் நிலை மேலும் தீவிரமடையும் தற்போதும் அவ்வாறான நிலைமையே காணப்படுகிறது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணிப்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:- செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்னிடம் கேட்டுக்கொண்டார் என்று சோமரத்ன ராஜபக்ச கூறியுள்ளார். அப்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே வால் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் மூலம் கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அந்தக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவே அனுப்பினார் என்றும் சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'மனிதப் புதைகுழி தொடர்பில் எதனையும் கூறவேண்டாம். பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் சோமரத்ன ராஜபக்ச வெளிப்படுத்தியுள்ளார். எனவே, சோமரத்ன ராஜபக்ச வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் தீர்க்கமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கு எதிரக மிகக்கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## வெற்றுக்காணியில்...

காணியின் உரிமையாளர் தனது காணியைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்ட வேளையில் குறித்த கைக்குண்டை அவதானித்துள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர். இதையடுத்தே நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு குறித்த கைக்குண்டு இன்று மீட்கப்படவுள்ளது. (அ-ம-26)

## பதவி...

நீர்கொழும்பு சிறையில் ஏற்பட்ட கலவரத்துக்குப் பொறுப்பேற்று பதவி விலகுமாறு சிலர் அழுத்தம் வழங்கி வருகின்றனர். அவ்வாறு பதவி விலகும் எண்ணம் எனக்கு இல்லை. இத்தகைய அழுத்தங்களுக்கு நான் ஒருபோதும் பணியப்போவதில்லை. ஜனாதிபதி அறிவித்தால் மட்டுமே பதவிவிலகல் தொடர்பில் சிந்திப்பேன். சிறைக்கலவரம் தொடர்பில் தற்போது தீர்க்கமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. காயமடைந்த கைதிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## இராணுவ...

வியாழக்கிழமை 25 ஏக்கர் தனியார் காணிகளை சுவீ கரிப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தவும் தீர்மானித்துள்ளனர். இவ்வாறான நிலையிலேயே, இராணுவ முகாமுக்காகவே இந்தக் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது என்று வடமராட்சி கிழக்கு பதில் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (அ-ம-66)

## பலி...

இந்தக் கலவரத்தில் படுகாயம் அடைந்திருந்த சிறை அத்தியட்சகர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இதையடுத்தே பலி எண்ணிக்கை 28ஆக அதிகரித்தது. (அ-ம)

## யாழுக்கான...

மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ள தாவது:-

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள், யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வடமாகாணத்துக்கு வரவுள்ளனர். இவ்வாறான நிலையில் ரயில் பெட்டிகள் இன்மை உள்ளிட்ட காரணங்களால் ரயில் சேவைகளைக் குறைப்பது தொடர்பில் முடிவெடுத்துள்ளமை பொருத்தமற்ற நடவடிக்கையாக உள்ளது.

வடக்குக்கான ரயில் சேவையை வலுப்படுத்த வேண்டிய நேரத்தில், அதைக் குறைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. வடமாகாணத்துக்குப் பயணிக்கும் மக்கள் நீண்ட காலமாகவே போதிய ரயில் சேவையின்மையாலும், பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத கால அட்டவணையாலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் குறித்து நாம் பலமுறை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து, தற்போதைய ரயில் அட்டவணையில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளோம். ஆனால் அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசு தற்போது சேவைகளை மேலும் குறைத்து, தினசரி ரயிலை நம்பியிருக்கும் பயணிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் மற்றும் குடும்பங்களுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

மின் இயக்கத் தொகுதிகள் பற்றாக்குறையே இதற்கான காரணம் எனக் கூறப்படுவது புதிய விடயமல்ல. இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வந்திருந்தால், வடக்கில் ஆண்டின் மிக அதிக பயணிகள் நெரிசல் காணப்படும் நல்லூர் கந்த சுவாமி ஆலய மகோற்சவத்திற்கு முன்னரே அதற்கு ஏன் தீர்வு காணப்படவில்லை?

மேலும், இந்த முடிவு உண்மையில் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதா, அல்லது தனியார் பேருந்து உரிமையாளர்களின் நலனுக்கு சாதகமாக அமையும் வகையில் எடுக்கப்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆயிரக்கணக்கான பக்தர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மலிவானதும் நம்பகமானதுமான ரயில் சேவையை நம்பியிருக்கும் நிலையில், அந்த சேவையை குறைப்பது யாருடைய நலனைப் பாதுகாக்கிறது என்பதை அரசு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26)

## விசாரணைகளைத்...

உசைன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைசாலி என்ற சிறுமி காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது, கடந்த இரண்டரை வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் இந்த வழக்கை பொலிஸார் கையாளும் விதம் தொடர்பில் நீதிபதி தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இந்த வழக்கை மேலும் தாமதிக்காமல் சட்டமா அதிபரை நேரில் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்று விரைவில் இறுதி அறிக்கை வழங்குமாறும் அவர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கினார். இதன்போது சட்டமாஅதிபரின் ஆலோசனைக்காக கோப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் சட்டத்தரணிகளான செ.லக்சன் மற்றும் பு.அபிதன், எஸ்.கே.புரந்தரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ரணிலுக்கு...

யப்படுத்தியது. தனது பதவிக்காலத்தில் லண்டனுக்கு மேற்கொண்ட பயணத்தின்போது அரச நிதியை மோசடி செய்தார் என்று ரணிலுக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ரணில் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராக விளக்கமறியல் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பான விசாரணைகள் நிறைவுக்கு வந்துள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியது. இதையடுத்து, செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பாதசாரிக்...

நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பாதசாரிக் கடவையூடாக வீதியைக் கடந்த குறித்த நபரை வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் ரக வாகனம் முதலில் மோதியுள்ளது. இதன்போது தூக்கி வீசப்பட்ட அவரை பிறிதொரு காரும் மோதித் தள்ளியுள்ளது. இதையடுத்து படுகாயம் அடைந்த குறித்த நபர் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைகள் பயனளிக்காமல் உயிரிழந்தார். புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## ரயிலுடன்...

றுள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தரும் அவரது மகனுமே இவ்வாறு படுகாயம் அடைந்தவர்களாவர். அவர்கள் முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-ம-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# கிராமிய வாழ்வுக்கான ஒளியூட்டல் திட்டம் யாழில் அங்குரார்ப்பணம்!

வடக்கு மாகாண மக்களின் கண் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட 'கிராமிய வாழ்வுக்கான ஒளியூட்டல்' திட்டத்தின் யாழ்.மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை அலுவலகத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் எம்.மலரவனால் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாகச் சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாண போதனா மருத்துவ மனையின் கண்சத்திரசிகிச்சை நிபுணர் எம். மலரவன் திட்டத்தின் நோக்கம் மற்றும் தொழில்நுட்பக் காரணிகள் குறித்து விளக்கமளித்தார். இதனூடாக 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தொற்றாநோய்ப் பரிசோதனையுடன் கண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். தொடர்ந்து கண் பிரச்சினைகள் உள்ளவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு மூக்குக் கண்ணாடி மற்றும் வெண்புரைச் சத்திரசிகிச்சை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் வடமாகாணச் சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, வடமாகாணச் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவகலாநிதி வி.பி.எஸ்.டி.பத்திரண, யாழ்ப்பாணப் பிராந்தியச் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. ஆறுமுகம் கேதீஸ்வரன், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மருத்துவ நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப்பளலரும் கலந்துகொண்டனர். (ச–66)

# சட்ட மாணவி சடலமாக மீட்பு

பாணந்துறை வடக்குப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரகானா பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து யுவதியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது. கத்தியால் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இந்தச் சடலம், அந்த வீட்டிலிருந்து வெளியான கடும் துர்நாற்றம் காரணமாகபிரதேசவாசிகளும் பொலிஸாரும் இணைந்து கதவை உடைத்து சோத னை செய்த போது கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர், தனியார் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வி பயின்று வந்த 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் தனது சட்டப்படிப்புடன் மேலதிக பயிற்சியாக ஒரு சட்டத்தரணியின்கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச–இ)

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காடு கட்டப்பிராயில் 2 பரப்புக் காணி (இரண்டு துண்டுகளாக பிரித்துக்கொடுக்கப்படும்) விற்பனைக்கு உண்டு.

**077 863 1785**

(CS/61830) J-1

**வேலையாட்கள் தேவை**

கொடிகாமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர், கொத்து போடத்தெரிந்த வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- **077 948 4887**

(CS/61834) J-1


**பணியாளர் வெற்றிடம் [பளை]**

- கணினி தரவுப் பதிவாளர் (Data entry operator) - ஆண்கள்
  (கணினி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கள்)
- விநியோக உதவியாளர் (பளை, யாழ்ப்பாணம்)
- (கணினி அறிவு / முன் அனுபவம் விசேட தகைமையாக கொள்ளப்படும்)
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்)
- பளை/ கிளிநொச்சி/ கொடிகாமம் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்
- நிரந்தர தொழில்.
- ✓ சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

**ESS JEY ELECTRICALS**
**No.09, STANLEY ROAD, JAFFNA**
**021 222 2564, 021 222 7430**

CS/61835) J-1

# மரண அறிவித்தல்



## சபாபதி செல்வநாயகம்

சுன்னாகம் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், மூர்த்தியான்கூடல் சுன்னாகம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி செல்வநாயகம் (அப்புத்தம்பி) அவர்கள் 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - சின்னாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பட்டம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தனரூபன் மற்றும் சியாமளா (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) துளசிதரன் (லண்டன்), கிரிசாந்தன், சுமங்கலி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாலன் (இலங்கை மின்சாரசபை), நீலாம்பிகை (லண்டன்), சுபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிக்சிகா (கனடா), டிலக்சிகா, நிலக்சி (லண்டன்), வினுக்சி (லண்டன்), தஜீவ், கிருஸ்ணிகா, செங்கதிர் (கனடா), செந்தாளன் (கனடா), ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.07.2026) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.04.1951 | 05.07.2026 |

மூர்த்தியான்கூடல்,
சுன்னாகம் மேற்கு. (CS/61831) J-1

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.